சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நிலம் கையகப்படுத்தி மாநகராட்சி / நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான் அமைக்க நிருவாக ஒப்புதல் அளித்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல (சிநஆபி1) த்துறை

அரசாணை (நிலை) எண்.15 நாள் 30.01.2024

திருவள்ளுவர் ஆண்டு 2055

சோபகிருது, தை–16

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.97, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 17.12.2020.
2. அரசாணை (நிலை) எண்.40, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 09.06.2023.
3. சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடித எண்.பி1/ 1690/2020, நாள் 23.01.2024.

*********

ஆணை:–

09.01.2024 அன்று நடைபெற்ற சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

> "கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாநகராட்சி / நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டம் / கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கபர்ஸ்தான்கள் மற்றும் கல்லறைத் தோட்டங்கள் அமைக்க தேவைப்படும் தனியார் நிலத்தினை கையகப்படுத்த நடைமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கபர்ஸ்தான்கள் மற்றும்

கல்லறைத் தோட்டங்களுக்கு புதிதாக சுற்றுச்சுவர் மற்றும் பாதை அமைக்க, புனரமைக்க ஒரு கோடி ரூபாய் ஒப்பளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்கள் 22 மாவட்டங்களில் மாவட்ட தலைமையிடம் மற்றும் அருகில் சுற்றியுள்ள இடங்களில் அரசாங்க நிலங்களில் கபர்ஸ்தான்கள் மற்றும் கல்லறைத் தோட்டங்கள் இல்லை என மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேற்காண் 22 மாவட்டங்களில் தகுதியான அரசு புறம்போக்கு நிலங்களை கண்டறிந்து கபர்ஸ்தான்கள் மற்றும் கல்லறைத் தோட்டங்களை மாநகராட்சி / நகராட்சி சார்பில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் தேவையின் அடிப்படையில் மற்ற மாவட்டங்களிலும் கபர்ஸ்தான்கள் மற்றும் கல்லறைத் தோட்டங்ககளை அமைக்கவும், தகுதியான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கபெறாத பட்சத்தில் தனியார் நிலங்களை கையகப்படுத்தி வழங்கிட, ஏற்கனவே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட தலைமையிடம் மற்றும் அருகில் சுற்றியுள்ள இடங்களில் அரசாங்க நிலங்களில் / தனியாரிடம் நிலம் கையகப்படுத்தி கபர்ஸ்தான்கள் மற்றும் கல்லறைத் தோட்டங்கள் அமைக்க ஏதுவாக ரூ.10,00,00,000/- (ரூபாய் பத்து கோடி மட்டும்) புதிய கணக்கு தலைப்பு உருவாக்கி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பைச் செயற்படுத்தும் விதமாக சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து, கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில், தேவைப்படும் நிலத்தை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கையகப்படுத்தி, மாநகராட்சி / நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டங்கள் மற்றும் கபர்ஸ்தான்கள் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. இத்திட்டத்தினை செயற்படுத்த நிதி ஒதுக்கீடு கோரி உரிய கருத்துருவினை உடன் அரசுக்கு அனுப்புமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரீட்டா ஹரீஷ் தக்கர்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை-5.

உறுப்பினர்-செயலர்,
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்கள்,
சென்னை, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி.
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்
தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
சென்னை-9.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை-9.
நிதி (பி, மிபி (ம) சிந) துறை, சென்னை-9.
அரசு செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/1/24

பிரிவு அலுவலர்.